980 பிப்ரவரி 12]

ஆ. பேரவையின் அமைப்பு எல்லைக்குள் இரகசிய காவலர்கள் போடப்பட்டுள்ளார்களா என்பது குறித்து.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த பேரவையும் அதைச்சுற்றி இருக்கிற பகுதிகளும் லாபி போன்ற பகுதிகளும் தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் ஆகும். சட்ட மன்றம் நடக்கிற நாட்களில் மட்டுமல்ல; மற்ற நேரங்களிலும்கூட. ஆனால் இது அரசாங்க இடமாக இருந்தாலும் தங்களுடைய ஆளுகையின் கீழ்தான் வரும். அவர்களின் ஆளுகையின் கீழ் வராது. இன்றைக்குக் காலையிலிருந்தே பார்க்கிறேன். நிறைய போலிசார்கள், சப் இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்கள் ஈ மொய்ப்பது போன்று லாபியிலும், மற்றும் ஏங்கே போனாலும் இருக்கிறார்கள். வராண்டா, லைப்ரரி எங்கே போனாலும் எம். எல். ஏக்களைப் பார்ப்பதைவிட போலீசைத்தான் நிறையப் பார்க்க முடிகிறது. இன்றைக்கு இங்கே ஏதேனும் அதிசயம் நிகழப் போகிறதா? அல்லது உங்கள் அனுமதியோடுதான் அவர்கள் வந்திருக்கிறார்களா? என்பதை அறிய விரும்புகிறேன், சட்டமன்றத்தின் நிகழ்ச்சிகளின்போது எம். எல். ஏக்கள் உட்கார்ந்து கொள்ளுகிற இடங்களில் எல்லாம் போலீசார் உட்கார்ந்திருப்பதும், லாபியிலே எல்லாம் நின்று கொண்டு இருப்பதும் ஏதோ இந்தச் சர்க்கார் எம். எல். ஏ.க்களை ஒரு கேடியைப் போல் நடத்துகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள் சொல்லுகிறேன். இதை இய பெருந்தன்மையோடு எடுத்துச் சொன்னால் நான் ஏற்றுக்கொண்டிருப்பேன். இங்கே உங்களுக்கு ஊறு விளையத்தக்க, உங்களுக்குத் தொல்லை தருகின்ற அளவுக்கு இருக்குமேயானால் பாதுகாப்புக்கு நான் பொருப்பாளி. நீங்கள் கொண்டு வந்திருக்கிற இந்தப் பிரச்சினைக்கு இடையூறாகவோ அல்லது பிறருக்கு அவர்களாலே தொல்லை தருவதாகவோ இந்தப் பிரச்சினை இந்த மன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படுமானால் நிச்சயமாக என் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். நான் நடவடிக்கை எடுக்கத் தயார். ஆனால் ஒரு அரசுக்கு இப்படிப்பட்ட முறைகளை வைத்துக்கொள்வது எங்கேயும் உள்ள ஒன்றுதானே தவிர வேறு அல்ல. (குறுக்கீடு துரைமுருகனுக்கு அதனாலே தொல்லை என்றால் மூதி) கொடுங்கள்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, உறுப்பினர்களுக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் வந்திருப்பதுபோல தெரிகிறது. நான் தொல்லைப்படுத்தப்பட்டால் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. துரைமுருகனுக்கு தொல்லை என்றால் துரைமுருகன் அதை ஏற்றுக்கொள்ளத்

தயார். ஆகவே, வழக்கத்திற்கு மாறாக இருக்கிற சி. ஐ. டி. களை நீங்கள் வெளியேற்றிவிட வேண்டும். லாபியிலும் மற்ற இடங்களிலும் சி.ஐ.டி. வருவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து நீங்கள் பேசும்போதும் யோக்கியதையோடு பேசுங்கள்.

திரு. துரைமுருகன்: நான் என்ன யோக்கியதை குறைவாகச் சொல்லிவிட்டேன்? யோக்கியதை என்பது தவறான வார்த்தையா? அது என்ன 'அன்பார்லிமெண்டரி' வார்த்தையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வார்த்தைகளைப் பயன் படுத்தும்போது கவனமாக பயன்படுத்த வேண்டும். பேசுபவர்கள் யோக்கியதையோடு பேசினால் நல்லது.

திரு. துரைமுருகன்; முதலிலே நீங்கள் யோக்கியதையாகப் பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன் அவர்கள் பிரச்சனையைப் பெரிதாக்க விரும்பினால் அதற்கு நான் தயார், நீங்கள் பேரவைத் தலைவரைப்பார்த்து இப்படியெல்லாம் பேசுவது நியாயம் அல்ல. துரைமுருகன்தான் பேசலாம், எந்த இடத்திலும் பேசலாம் என்று சொன்னால் நியாயம் அல்ல, (குறுக்கீடு) இங்கே இருப்பவர்கள் என்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட காவல் துறையினர். அவர்கள் மாற்று உடையிலே எப்போதும் பணியாற்றுகிறவர்கள். அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை.

திரு. துரைமுருகன்: நான் சவால் விடுகிறேன், என்னோடு வாருங்கள். எத்தனை பேரை பிடித்துத் தருகிறேன் என்று பாருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, தனிப்பட்ட உறுப்பினர்களுக்குத் தொல்லை இருக்கிறா இல்லையா என்பது வேறு. ஒரு துறை இன்னொரு துறையின் அதிகார வரம்புக்குள் வருவது விரும்பத்தக்கதல்ல.

"Legislature is a separate independent Constitutional body. The Executive Authority should not be allowed to intrude into the sovereign right of Legislature"

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்வது மாதிரி சி. ஐ. டி. இங்கே இருந்தால் நான் அனுமதிக்க முடியாது. சி. ஐ. டி. யாரும் லாபியில் இருக்கக் கூடாது. சார்ஜன்டிடம் சொல்லியிருக்கிறேன். யாராவது இருந்தால் அவர் வெளியேற்றி

விடுவார். இங்கே காவல் துறையினர் மாற்று உடையில் இருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் மாற்று உடையில் பணியாற்றுகிறவர்கள் தான். மற்றவர்கள் இருந்தால் அவர்கள் அப்புறப்படுத்தப்படுவார்கள்.

2. அறிவிப்புகள்.

அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை விதி 256ன்கீழ் 1979–80 ஆம் ஆண்டு அலுவல் ஆய்வுக் குழுவில் திரு. சேலம் மு. ஆறுமுகத்திற்குப் பதிலாக திரு. எஸ். ஆண்டித்தேவர் அவர்களை உறுப்பினராக நியமிக்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் முறைப்படி உறுப்பினர்களை நியமிக்கிறீர்கள். இருப்பினும் கட்சியினுடைய கொறடாக்கள் அனுமதிக்கப்பட்டால் இன்னும் கொஞ்சம் வசதியாக இருக்கும் என்பதால், அவர்களுக்குள்ள சங்கடங்களைக் குறைத்துக்கொள்ள வசதியாக இருக்கும் என்ற காரணத்தால் அவர்களையும் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே நம்முடைய விதியில் 17–க்குமேல் உறுப்பினர்கள் இருக்கக் கூடாது என்று இருக்கிறது. அந்த விதியின் கீழ், 17 உறுப்பினர்களைக்கொண்டு, அலுவல் ஆய்வுக்குழுவில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இடம்பெறுவது தேவை, அவசியம் என்பதால் கணிசமாக கட்சியினுடைய சக்திக்கு ஏற்றவாறு இடம் தரப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு சேர்ப்பதற்கு விதியைத் தளர்த்தியாக வேண்டும். அந்த முறையை எப்போதும் கையாண்டதில்லை. அந்தந்தக் கட்சியினுடைய பிரிதிநிதிகள் கொறடாவின் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, கொறடாக்களை அனுமதிக்க வேண்டும் என்று சொல்வதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. அது வழக்கமும் அல்ல. அவர்களுடைய கட்சிப்பிரதிநிதிகளே, கொறடாக்களின் கருத்துக்களை அலுவல் ஆய்வுக்குழுவில் தெரிவிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கைக்கு தாங்கள் பதில் அளிக்கும்போது, விதிகளை தளர்த்தினால் இடம்பெற வாய்ப்பு இருக்கும் என்று அறிவித்தீர்கள். இருக்கும் நிலை கருதி, சூழ்நிலை கருதி, விதிகளை தளர்த்தியாவது அத்தகைய நிலை உருவாவதற்கு தாங்கள் உதவி புரிய வேண்டும். அதற்கு அவை முன்னவர் அவர்களும் ஒத்துழைப்பார் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிட்டப்பா அவர்கள் கேட்டதைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து பேசி, அலுவல் ஆய்வுக்குழு எடுக்கும் முடிவை அவருக்கும் தெரிவிக்கிறேன்